[29th January 1963

THE HON. SRI P. KAKKAN : A paper * is placed on the table of the House.

இது சம்பந்தமான ஓர் அறிக்கை சபைமுன் வைக்கப் பட்டுள்ளது.

ஜில்லா முன்சீப் கோர்ட்டு (சங்ககிரி)

* 7 **கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சங்ககிரி ஜில்லா முன்சீப் கோர்ட்டை சங்ககிரிக்கு மாற்றும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Prohibition

* 8 Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to revise the prohibition policy in the State in view of national emergency ?

THE HON. SRI P. KAKKAN : No.

இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக, எல்லா மாநிலங்களிலும் மது விலக்கை ரத்து செய்துவிடவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை உருவாகியும், டில்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள், இதை நீடிக்கவேண்டும் என்று பிடிவாதமாக வற்புறுத்தியதின் காரணத் தினலேதான் இது ரத்து செய்யப்படாமலிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. கு. காமராஜ் : எல்லா மாநிலங்களிலும் மது விலக்கை ரத்து செய்யவேண்டும் என்று யார் சொன்னர்கள் ? பத்திரிகைகளிலே அங்குமிங்குமாக வந்ததை வைத்துத்தானே கனம் அங்கத்தினர் யூகமாகக் கேட்கிருர் ? அதுமாதிரி ஒன்றும் யோசனை இல்லை.

திரு. கோ. சி. மணி : குற்றங் குறைகளைத் தீவிரமாகக் கண்டு பிடித்து மதுவிலக்குத் திட்டத்தை மேலும் வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்காக ஸ்பெஷல் போலீசாரை நியமிக்க ஏதாவது யோசனை இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்பெஷல் போலீஸ் நியமிக்கப்பட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இப்பொழுது இருக்கும் போலீஸை வைத்துக்கொண்டே, எவ்வளவு துரிதமான நட வடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளுகிறோம்.

---

* Printed as Appendix I on pages 99-100.